பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 05 செவ்வாய்க்கிழமை (18-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 171

## மாகாணசபைத் தேர்தல்கள்

# நேற்று அமைதியான வாக்களிப்பு

# பெரிய அசம்பாவிதங்கள் இல்லை!

## எதிரணிக்கு வெற்றி வாய்ப்பு

கொழும்பு, மே 18

வடக்கு — கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் நேற்று மாகாணசபைத் தேர்தல்கள் மிக அமைதியாக நடைபெற்றன. பெரிய அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

இத்தேர்தலில் எதிரணிக்கு அதிக வெற்றிவாய்ப்புகள் இருப்பதாக முற்கொண்டு கிடைத்த ஆரம்பக் கட்டத் தகவல்கள் தெரிவித்தன.

மிகப் பரபரப்பின் மத்தியில் பேசப்பட்ட மாகாணசபைத் தேர்தல்கள் நேற்று அமைதியாக நடைபெற்றன.

இத்தேர்தல்கள் வன்செயல்களே இல்லாத தேர்தலாக அமைந்தன என தேர்தல் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் இக்னேஷியஸ் கனகரத்தினம் தெரிவித்தார்

எனினும் ஆங்காங்கே கள்ள வாக்குப் போடுதல், ஆள் மாறாட்டம் போன்றவையும், மக்களை மிரட்டும் சம்பவங்களும் இடம்பெற்றன.

கடந்த முறை மாகாண

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பலத்த மழைக்கு மத்தியில் நேற்று 70 வீத வாக்களிப்பு

நேற்று நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் —பலத்த மழைக்கு மத்தியில் — 70 வீதமான வாக்காளர்கள் வாக்களித்ததாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஏழு மாகாணங்களில் பலவற்றிலும் நேற்று கடுமையான மழை பெய்தது.

எனினும் வாக்களிப்பு அமைதியாகவும், வன்செயல்கள் இன்றியும் இடம்பெற்றதாக பொலீஸார் அறிவித்தனர்.

ஏழு மாகாணசபைகளுக்கான 366 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் இத்தேர்தலில் சுமார் 93 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

## காலையில் வாக்களிப்பு மழையால் மந்தநிலை

ஏழு மாகாணங்களில் பலவற்றிலும் நேற்று மழை காரணமாக காலையில் வாக்களிப்பு மிக மந்தமாக இருந்தது

பல இடங்களில் மழையுடன் கூடிய கடும் காற்று வீசியது. இதனால் வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் செல்லவில்லை.

பிற்பகலில் மழை குறைந்தபோது மக்கள் உற்சாகத்துடன் வாக்களிப்பில் பங்குபற்றினர்.

காலி முதல் கட்டுநாயக்கா வரையான பகுதிகளிலேயே நேற்று பெருமழை பொழிந்தது

கண்டி, பதுளை போன்ற மலைநாட்டுப் பகுதிகளிலும் வடமத்திய மாகாணத்திலும் காலநிலை சீராக இருந்ததாகவும்—

இதனால் அப்பகுதிகளில் காலை முதல் வாக்களிப்பில் மக்கள் உற்சாகத்துடன் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வாக்களிப்பு நிலையம் மழையால் இடிந்து வீழ்ந்தது

நேற்றுப் பெய்த மழையினாலும் காற்றினாலும் பாணந்துறைப் பகுதியில் வாக்களிப்பு நிலையம் ஒன்று இடிந்து விழுந்தது. இதனால் அங்கு வாக்களிக்கச் சென்ற ஒருவரும், ஐந்து தேர்தல் அதிகாரிகளும் காயமடைந்தனர்.

## வாக்குச் சாவடிகளுக்கு படகில் சென்ற மக்கள்!

நேற்று தெற்கில் பரவலாக பெய்த மழையினால் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டது.

வெள்ளப்பகுதிகள் சிலவற்றில் வாக்காளர்கள் படகு, தோணிகள் போன்றவற்றில் ஏறி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது

## வாக்குகளை எண்ணும் பணி நேற்றிரவு ஆரம்பமானது

மாகாணசபைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி 17 மாவட்ட செயலகங்களிலும் நேற்று இரவு 8.30 மணியளவில் ஆரம்பமாகியது.

முதலில் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டன. அதனைத் தொடர்ந்து இரவு 9.30 மணியளவில் நேற்று அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பமானது.

## தபால் வாக்குகள்; அதிகளவு எதிரணிக்கு!

நேற்று இரவு தபால் மூல வாக்குகள் எண்ணப்பட்டபோது அதில் பெரும்பாலான வாக்குகள் ஸ்ரீ ல சு க. தலைமையினான பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு கிடைத்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## வாகனங்கள் பறிமுதல்

கடுகண்ணாவை, குருநாகல் பகுதிகளில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குச் சொந்தமான வாகனங்களைப் பொலீஸார் பறித்தனர். அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் காமினி திஸநாயக்கா இத்தகவலைத் தெரிவித்தார்.

## வேட்பாளர்கள் மிரட்டப்பட்டனர்

தெற்கில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களை கிராதன கோட்டே பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மிரட்டியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேட்பாளர் லக்ஷ்மன் செனிவிரத்ன என்பவர் இந்த முறைப்பாட்டைச் செய்திருக்கிறார்.

## பிரமுகர்கள் வாக்களிப்பு

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கண்டியில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் நேற்று வாக்கைச் செலுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பல்கலைக்கழகத்திலும், எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அத்தனகலை சங்கபோதி மகாவித்தியாலத்திலும், திருமதி சிறிமானி அத்துலத் முதலி கொள்ளுப்பிட்டியிலும் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்கை அளித்தனர்.

## 'நில்கிரி' கப்பல் இன்று வரும்

ஒரு தொகுதி மண் எண்ணை பரல்களை ஏற்றிக் கொண்டு 'நில்கிரி' கப்பல் [illegible] படுகிறது. (உ-5)

## கள்ள வாக்குப் போடும் முயற்சியில் ஐ.தே கவினர்

கொழும்பில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொண்டர்கள் கள்ள வாக்குப் போடும் முயற்சியில் ஈடுபட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய பொலீஸார் அரசாங்கத்தின் கைக்கூலிகளாகச் செயல்பட்டதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா குற்றஞ் சுமத்தியுள்ளார்.

## உணவு, சாராயம், 20 ரூபா வாக்காளருக்கு லஞ்சம்

கொழும்பு மத்திய தொகுதியில் ஆளும் கட்சியினர் வாக்காளர்களைக் கவருவதற்காக உணவுப் பொதி, ஒரு டிராம் சாராயம், இருபது ரூபா பணம் ஆகியவற்றை லஞ்சமாக வழங்கினர் ஐ தே. கவினரின் இந்நடவடிக்கைகளை நேரில் கண்டவர்கள் இத்தகவலைத் தெரிவித்ததாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

## மாற்று கட்சியினரைத் தாக்க முற்பட்ட அமைச்சர்!

அநுராதபுரம் மாவட்டம் மொறப்பிற்றியாகமவில் நேற்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றின் போது தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஏ எம் எஸ். அதிகாரி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பிரதிநிதிகளைத் தாக்க முற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பொலீஸாரின் தலையீட்டை அடுத்து மோதல் தவிர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அநுராதபுர மாவட்டம் வடமத்திய மாகாணத்தின் கீழ் வருகிறது வடமத்திய மாகாணசபைக்கான தேர்தலில் ஐ தே. கவின் பட்டியலில் அமைச்சர் அதிகாரியின் மனைவியான ராணி அதிகாரி போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார் அமைச்சர்

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா வென்னப்புவ மேற்கில் வசிக்கும் லக்ஷ்மன் பெர்னான்டோ என்பவரைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார் என்று கடந்த ஞாயிறன்று வென்னப்புவ பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தலைமையில் வந்த கோஷ்டி ஒன்று தமது வீட்டுக்கு முன்னால் ஒட்டியிருந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசார போஸ்டர் ஒன்றைக் கிழித்த பின்னர், அமைச்சர் தன்னை துப்பாக்கியைக் காட்டி மிரட்டிவிட்டுச் சென்றதாக லக்ஷ்மன் முறைப்பாடு செய்திருக்கிறார்.

அமைச்சர் விஜேபால மெண்டிஸும் சாதாரண மக்களை துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார் என முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## ஐ. தே. கவுக்கு எதிரானோர் நேற்றுத் தாக்கப்பட்டனர்

### இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரியில் கினிமலே உட்பட நான்கு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஐ. தே கவுக்கு எதிராகச் செயற்பட்டனர் என்றும்—

அதனால் அவர்களை நேற்று வாக்களிக்கச் செல்லவிடாமல் தடுப்பதற்கு முயற்சிகள் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

ஐ. தே கவைச் சேர்ந்த முன்னாள் துணை அமைச்சர் புஞ்சி நிலமேயின் மகனான சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் இக்கிராமத்துக்குச் சென்ற குண்டர் குழு ஒன்று, அங்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஏழு பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. காயமுற்ற அனைவரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட சுசந்த புஞ்சிநிலமே மீது சிறிமா விதானே வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்பதும்—

அவர் இரத்தினபுரி மாவட்டத்துக்குள் பிரவேசிப்பதற்கு நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தத் தடையை மீறி அவர் இரத்தினபுரி மாவட்டத்துக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் C C பாடசாலைக்கு முன்பாக வீடு மற்றும் இருபது தென்னை மரங்கள், மா, பலா பிரயோசனங்களுடன் ஒன்பது பரப்பு காணி விற்பனைக்கு உண்டு பகுதியாகவும் கொடுக்கப்படும். S. கனகரட்னம், இல. 465/1, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (25710)

### துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மற்றும் சுபமங்களா, சவனம், விருட்சம், குன்றின் குரல் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விவரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி றோட், (புதிய பஸ்நிலையம் முன்), யாழ்ப்பாணம். (6177)

### பெயர் மாற்றம்

யாழ். நகரைவதிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

### இலவச திருமண சேவை

30 வயது, திருவோணம், இரக பாவமற்ற சுவிஸ் மணமகனுக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். உள்நாடு, வெளிநாடு மணமக்களுக்கு; விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (25711)

34 வயது, பூரம் மணப்பெண்ணுக்கு வெளிநாடு, உள்நாடு மணமகன் தேவை. சீதனம் உண்டு. சகல மதங்களில் மணமக்களுக்குத் தொடர்பு; ஞாயிறு காலையில் விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (25713)

### மணமகன் தேவை

25 வயதுடைய சைவசமய, A/L படித்த மணமகளுக்கு தமிழீழத்தில் தொழில் புரியும் உயர்கல்வியும், நற்குணமும், 5' 6'' திற்குக் குறையாத உயரமும் உள்ள மணமகன் தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். இல. 903, மே/பா உதயன். (6187)

### திருமண சேவை

யாழ். இந்து. வயது 36, பரணி நட்சத்திரம், சிங்க லக்கினம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 39/16, கொழும்பில் அரச கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை தகுந்த சீதனம் வழங்கப்படும். இல 904, மே/பா உதயன். (6190)

## விவசாய செயற்பாட்டு திட்டம்

யாழ்ப்பாணம், மே 18

1992 — 1993ஆம் ஆண்டு காலத்திற்குரிய யாழ். மாவட்ட விவசாய செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிப்பதற்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பிரதேச செயலாளர்கள் பிரிவுகள் ரீதியாக இத்திட்டம் முதற்கட்டமாக தயாரிக்கப்படும். இதற்கான அறிவித்தல்கள் அவ்வப்பகுதி பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அடுத்த வாரமளவில் பிரதான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (த-162)

---

உ

## வில்லூன்றி புனித தீர்த்தம் அறிவித்தல்

வில்லூன்றி புனித தீர்த்தம் துப்புரவு செய்வதற்காக 19-5-93 காலை 7 மணிமுதல் 21-5-93 முற்பகல் 10 மணிவரை பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டிருக்கும்.

வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ தீர்த்தோற்சவம் 21-5-93 முற்பகல் 10 மணிக்கு மோட்ச தீர்த்தத்தில் நிறைவுற்றவுடன், மோட்ச தீர்த்தம் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சங்கமிக்கும். அது சமயம் முதல் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் பொதுமக்கள் மீண்டும் தீர்த்தமாடலாம்.

குறிப்பு: அந்தியேட்டி மடத்தில் கிரியைகள் வழமை போல் செய்து கொள்ளலாம்.

செயலாளர்
வில்லூன்றி புனித தீர்த்த
பரிபாலன சபை

வில்லூன்றி.
17-05-93. (6192)

---

## 50 ஆவது நாள் நினைவஞ்சலி

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 17 | 30 |
| — | — |
| 05 | 03 |
| — | — |
| 1926 | 1993 |



### திருமதி. முருகேசு இராசம்மா

[காரைநகர் லொறிமணியத்தின் துணைவியார்]

வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்து நாளும்
வழிகாட்டி நின்ற பெருந்தாயே நாங்கள்
உய்வதற்குக் காரணமாய் நின்றாயம்மா!
உலகினிலே மனிதரென நிலைக்கச்செய்தாய்
செய்வதற்குத் தகுந்த பெருங் கடமை தன்னைச்
சீராகக் காட்டியதோர் தாயே நீங்கள்
தெய்வமாய் மாறி ஐம்பது நாட்களாயிற்று
திருமகளே என்றுமெமக் கருள்வாய் நீயே

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

பாசமுள்ள
குடும்பத்தினர்

பிள்ளையார் கோவில் பின் வீதி,
சித்தன் கேணி. (25717)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 28 | 28 |
| — | — |
| 08 | 05 |
| — | — |
| 1928 | 1992 |



### அமரர் சங்கரப்பிள்ளை செல்லப்பா

(பலாலி தெற்கு வயாவிளான்)

திதி: 18 - 05 - 1993

அலையலையாய் நினைவலைகள்
ஆயிரமாய் தோன்றுதிங்கே
இதயமது வெதும்பிடவே எம்
ஈன்றவளோடிணைந்து இன்று
உம் பிரிவால் வாடுகின்றோம்
ஊற்றெடுக்கும் உம் அன்பில் வாழ்ந்த
—வாழ்வதனை
எண்ணி எண்ணி தவிக்கின்றோம்
ஏது வாழ்வில் இன்ப ஊற்று!
ஐயா உமைப் பிரிந்த துயர் நமக்கு
ஒன்றல்ல நூறல்ல ஆயிரமே
ஓராண்டு நிறைவு பெறும் இந்நாளில்
ஔவைக்கு பாடஞ்சொன்ன ஆண்டவனிடம்
அஃது உமது ஆத்மா சாந்தி பெற
—பிரார்த்திக்கின்றோம்.........

18-05-93 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத் திதியிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

''முத்து பவனம்''
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (5924)

---

## கவிஞன் ஆண்டு மலர் வெளியீட்டு விழா

''கவிஞன்'' திங்கள் இதழ் ஆண்டுமலர் வெளியீட்டு விழாவும் 'கவிஞன் விருது' வழங்கலும் வல்வெட்டித்துறை நெடியகாடு கலையரங்கத்தில் நாளை புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் வல்வையின் முதுபெரும் கடலோடிகளான திரு. ஐ. இரத்தினசாமி, திரு. க. காத்தலிங்கம் ஆகியோருக்கு முறையே ''கப்பலோட்டிய மன்னன்'' ''கப்பலோட்டிய மைந்தன்'' ஆகிய பட்டங்கள் அளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தப்படும்.

''கவிஞன்'' சஞ்சிகையால் 1993 ஆம் ஆண்டுக்கென நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான விருதும், சான்றிதழ்களும் இவ் விழாவில் வழங்கப்படும். (க-155)

## லலித் கொலை விசாரணை; சந்தேக நபரை 6 சாட்சிகள் அடையாளம் காட்டினராம்!

### முன்னைய செய்திகள் தவறாம்

கொழும்பு, மே 18

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியை கொன்றதாக அறிவிக்கப்பட்டுள்ள கந்தையா ரகுநாதன் என்ற நபரை கிருலப்பனைப் பொலீஸார் மூன்று தினங்களுக்கு முன்னரே தேடி வந்தனர் என்று கூறப்படுவதையும் —

இந்த நபர் கிருலப்பனை பொலீஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அவரை அங்கு அவரது உறவினர்கள் பார்வையிட்டதாகக் கூறப்படுவதையும் பொலீஸார் மறுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

லலித்தைக் கொலை செய்தவர் இந்த நபர் தான் என்பதை ஆறு சாட்சிகள் அடையாளம் காட்டினார் என்றும் பொலீஸார் கூறினார்கள்.

## ரூ. 66 கோடி பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டது

### சேலம் அருகே சம்பவம்

சென்னை, மே 18

சேலம் அருகே 66 கோடி இந்திய ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்து கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

மத்தியப்பிரதேசத்தில் உள்ள மன்ஸார் என்னுமிடத்தில் இருந்து கோயம்புத்தூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றை அதிகாரிகள் வழி மறித்து சோதனையிட்டனர்.

லொறியில் சிலேட்டுப் பென்சில்கள் நடுவே ஹெரோயின் மறைத்து வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி மற்றும் இலங்கைப் பகுதிகளில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள குழுவைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படுகிறது. (ஒ-எ)

### நாளை

''பக்தியும் பாவனை உத்தியும்'' எனும் பொருள் பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைபால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் திரு. க. இரகுபரன் கருத்துரை வழங்குவார். (க)

### ஆலயங்களில்

தென்மராட்சி, மே 18

சாவகச்சேரி பெரியமாவடி கந்தசாமி ஆலய சாந்திக மகோற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

மகோற்சவ ஏழாம் திருவிழாவன்று புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெறும் (உ-117)

o o o

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இலக்கியவிழாவின் நான்காம் நாளான இன்று இரவு 8 மணிக்கு ''சுழலும் சொற்போர்'' நிகழ்ச்சி இடம்பெறும்.

---

## இறுதி அஞ்சலி

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 10 | 14 |
| — | — |
| 06 | 05 |
| — | — |
| 1967 | 1993 |



செல்வன்

### குலசிங்கம் சிவகுமார் (அமைச்சர்)

(கரவெட்டி)

(இறுதியாண்டு மாணவன், பௌதிக விஞ்ஞானப்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)

மறைந்த எம் தோழனுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் பெற்றோர், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக சகல விஞ்ஞானபீட மாணவர்களையும் இன்று காலை 8-30 மணியளவில் வளாகத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

3ஆம் வருட பௌதிக விஞ்ஞான மாணவர்கள்.
யாழ். பல்கலைக்கழகம்

[25716]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இனப்பிரச்சினைக்கே முதலிடம் தேவை

நாட்டின் மிக முக்கிய பிரச்சினையாக, பிரதான விவகாரமாக விளங்குவது இனப்பிரச்சினை. அது தீர்க்கப்பட்டு விட்டால் நாட்டின் ஏனைய பல பிரச்சினைகள் சுலபமாக முடிவுக்கு வந்துவிடும். இதனைத் தமிழ் மக்கள் மட்டுமன்றி, சிங்களப் பொதுமக்கள் மட்டுமன்றி, சிங்களத் தலைவர்களும் அறிவார்கள்.

ஆனால் தீர்வு காணப்பட வேண்டிய அந்தப் பிரச்சினை குறித்து சிங்களத் தலைவர்கள் சிறிதும் அக்கறைப்படவில்லை. நேற்று நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் இனப்பிரச்சினை முக்கிய விடயமாக மக்கள் முன் வைக்கப்படவில்லை. அது சம்பந்தமாக சிங்கள மக்களின் கருத்தறியும் வகையில் பிரசாரமும் நடத்தப்படவில்லை. இனப்பிரச்சினை குறித்து சிங்கள மக்களிடம் ஆணை பெறும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவுமில்லை.

இவ்விவகாரம் சம்பந்தமாக சிங்கள மக்களிடம் கருத்துக் கேட்டாலோ அல்லது ஆணை பெற முயன்றாலோ அது தமிழருக்குப் பாதகமாகவோ அல்லது சுமுகமான தீர்வு ஒன்றுக்குத் தடையாகவோ இருக்கக் கூடும். அது வேறு விடயம். ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து தென்னிலங்கைத் தலைவர்கள் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை என்பதே கவலைக்குரியதாகும்.

தெற்குத் தலைவர்கள் நாட்டின் அரசமைப்பை மாற்றுவது குறித்தும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்துமே தமது மண்டைகளை உடைத்துக் கொள்கிறார்கள்!

அவர்கள் தங்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரங்களைப் பற்றியும் பதவிகளைப் பற்றியுமே அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதே அதற்குக் காரணமாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை தனிமனிதன் ஒருவனிடம் அதிகாரங்களைக் குவித்து ஏதேச்சாதிகாரத்துக்கு வழிவிடுகிறது என்பது உண்மைதான். அதன் பயனாக மோசடி, ஊழல், ஏகபோக அதிகாரத் திமிர், அதர்மம், அநீதி என்பன விளைந்து மக்களது சுதந்திரத்துக்கும், வாழ்வுக்கும் ஊறு உண்டாகிறது என்பதும் தெளிவானதே.

ஆனால் பிரேமதாசா இறப்பார் என்றும், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துக்கட்டிவிட வேண்டும் என்றும் காத்திருந்தவர்கள் போல, எதிரணியினர் குறிப்பாக ஸ்ரீமாவோ கட்சியினர் அவசரப்படுகிறார்கள்!

அவர்களின் முகத்தில் அறைந்தது போல புதிய ஜனாதிபதி பதிலளித்துள்ளார். ''நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பு முறை குறித்து நான் திறந்த மனதுடன் உள்ளேன். முற்று முழுதான அதிகாரத்தை எனது வசம் வைத்திருக்க நான் விரும்பவில்லை. அதிகாரம் ஊழல் புரிகிறது நான் மிதவாதப் போக்கில் நம்பிக்கை கொண்டுள்ளேன்'' — என்று விஜேதுங்கா கூறியிருப்பதில், ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கும் விடயத்திற்கு அவர் ஆதரவாக இருப்பார் என்ற கருத்துத் தொனிக்கிறது அது பரவாயில்லை. ஆனால் அதற்கான வாதப்பிரதிவாதங்களும், செயல்முறைகளும் நடந்து முடிவதில் காலம் பறந்துவிடும்!

இந்த அமளியில் இனப்பிரச்சினையை சிங்களத் தலைவர்கள் மறந்தே விடுவார்கள். ஜனாதிபதி ஆட்சிமுறை இருப்பினும் சரி, நாடாளுமன்ற ஆட்சிமுறை வரினும் சரி, தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கும் வரை நாட்டில் அமைதியும் சமாதானமும் திரும்பப் போவதில்லை. எனவே சிங்களத் தலைவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலிடமும் ஆட்சிமுறை மாற்றத்துக்கு இரண்டாவது இடமும் கொடுக்கும் விதத்தில் தமது செயற்பாட்டை மாற்ற வேண்டும்.

# எயர் லங்கா இயக்குநர் சபை

# 24-ம் திகதி பதவி விலகுகிறது

## பிரேமதாசாவின் மருமகன் பதவி பறிபோகலாம்

கொழும்பு, மே 18

தற்கொலையாளியின் குண்டுத் தாக்குதலில் பலியான முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மருமகன் ஜயக்கொடி அங்கம் வகிக்கும் எயர் லங்காவின் இயக்குநர் சபை இம் மாதம் 24ஆம் திகதி முதல் பதவி விலக இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இயக்குநர் சபையின் புதிய தலைவராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சேபால ஆட்டிகலை பதவி ஏற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது லண்டனில் இலங்கைத் தூதராக இருக்கும் ஜெனரல் ஆட்டிகலை, புதிய பதவியை ஏற்பதற்காக அடுத்த வாரம் கொழும்பு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிய இயக்குநர்சபையில் பிரேமதாசவின் மருமகன் ஜயக்கொடி இடம் பெறமாட்டார் என்றும் பிரேமதாச ஆதரவாளர்களின் ஆதிக்கத்தை முறியடிப்பதே இயக்குநர் சபை, பதவி விலகுவதன் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், லக்திவ' இணை ஆசிரியர் வினிஹெற்றி கொட, பி.பி.ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில், பிரேமதாசவின் மருமகன் ஜயக்கொடி எயர்லங்கா இயக்குநர் சபையில் இருப்பதே அச்சபை பதவி விலகுவதற்கான காரணம் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் பிரேமதாச ஆதரவுச் செய்தியாளர்களும் இக்கட்டான நிலையில் தற்போது இருந்து வருவதாகவும் வினி ஹெற்றி கொட தெரிவித்துள்ளார்.

அரசு சார்பு லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் ''சிலுமின'' ''ஒப் சேர்வர்'' பத்திரிகைகளில், பிரேமதாசவுக்கு ஆதரவாக பிரசுரமாகி வந்த அனுருத்த திலகசிறியின் கட்டுரைகள் தற்போது வெளிவருவதில்லை என்றும்—

அதே போன்று மாகாண சபைத் தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்பட்டு அமைச்சரவையில் உள்ள பிரேமதாச ஆதரவாளர்கள் களை எடுப்புக்கு உள்ளாகலாம் என்றும் வினி ஹெற்றிகொட பி.பி.ஸி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-எ-6)

## தென்னம் நாற்றுக்கள்

கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு, கமநலசேவை நிலையங்களில் நாற்று மேடைகளில் வளர்க்கப்பட்ட உள்ளூர் இன தென்னம் நாற்றுக்கள் தற்போது விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

அம்பன், சாவகச்சேரி, நல்லூர் ஆகிய பகுதிகளிலுள்ள கமநலசேவை நிலையங்களில் இதற்கென 5,000 தென்னம் நாற்றுக்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தென்னம் கன்றுகளை கமநலசேவை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-162)

## தபால் விநியோக ஊழியருக்கு கொழும்பிலிருந்து சைக்கிள்

யாழ் மாவட்டத்தில் உள்ள தபாற் கந்தோர்களில் பணிபுரியும் தபால் விநியோகிக்கும் ஊழியர்களின் பாவனைக்கான சைக்கிள்களை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவித்து வழங்குவதற்கு வட மாகாண அஞ்சல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக தபால் விநியோகிக்கும் ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படவில்லை. அவர்களில் பலர் தமக்கு புதிய சைக்கிள்களை வழங்குமாறு வட மாகாண அஞ்சல் அதிபரைக் கோரியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அஞ்சல் திணைக்களம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (த-17)

## பூநகரி - ஆலங்கேணியில் மிளகாய் அமோக விளைச்சல்

அரியாலை, மே 18

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள ஆலங்கேணிப் பகுதியில் இம்முறை மிளகாய்ப் பயிர்ச் செய்கை அமோக விளைச்சல் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எல்லைக்கால், மூணையடம்பன் ஆகிய இடங்களில் அதிகளவு விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வன்னிப் பகுதியில் செத்தல் மிளகாயின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கிலோ 65 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை —

தற்போது நிலவும் வரட்சியால் இப்பகுதியில் உள்ள குளங்களில் தண்ணீர் வற்றத் தொடங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் தொடர்ந்தும் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடுவதைக் கைவிட வேண்டிய நிலை எழுந்துள்ளது. (த-17)

## தொண்டா சொல்கிறார்

ஒரு தொண்டமான் நாடாளுமன்றம் சென்று என்ன செய்ய முடியும் என்று கேட்டவர்கள் இன்று திகைத்து, ஆச்சரியமடைந்து போயுள்ளனர்.

அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது. (த-எ)

## பிரேமா கொலை விசாரணை;

## பிரதிப் பொலீஸ் மா அதிபர் தலைமையில் விசேட குழு

கொழும்பு, மே 18

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை பற்றிய விசாரணைகளை நடத்துவதற்கு இரகசிய பொலீஸ் திணைக்கள பிரதி பொலீஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ஷ தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் குற்றப் புலனாய்வுப் பணியகம், இரகசியப் பொலீஸ் திணைக்களம், தேசிய உளவுப் பணியகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர். இராணுவத்துறைப் புலனாய்வாளர்கள் இக்குழுவுக்கு உதவுவார்கள். பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா இக்குழுவை நியமித்துள்ளார். (த-எ)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உடன் பேச்சை ஆரம்பிக்குக

## கத்தோலிக்க ஆயர்சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மே 18

''இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.''

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சங்கம் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கண்டி குருமடத்தில் நடந்த கத்தோலிக்க ஆயர்கள் சங்கத்தின் விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அடங்கிய மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அண்மையில் அனுப்பப்பட்டுள்ளது. அந்த மகஜரிலேயே மேற்கண்ட கோரிக்கையும் அடங்கி உள்ளது.

ஆயர்சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ வடக்கு மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை உடன் நீக்க வேண்டும். எதுவித தடைகளும் இன்றி உணவு, மருந்து வகைகள் மக்களுக்கு தாராளமாகக் கிடைக்க வசதி செய்யவேண்டும்.

★ யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துச் சிர்கேட்டை நீக்க ஏதாவது ஒரு பாதையை போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும்.

★ மன்னார் மக்களின் போக்குவரத்துக்காக விடத்தல் தீவு பாதை மீது விதிக்கப்பட்டுள்ள தடையை உடன் நீக்கவேண்டும்.

★ விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்களால் மக்களுக்கு ஏற்படும் உயிர்ச் சேதங்களை தவிர்க்கும் வகையில் அத்தாக்குதல்களை உடன் நிறுத்தவேண்டும். (இ-3)

## அதிபர்கள், ஆசிரியருக்கு கல்வி மனோதத்துவ பயிற்சி

கொழும்பு, மே 18

பாடசாலை அதிபர்களுக்கும், சிரேஷ்ட ஆசிரியர்களுக்கும் என்று கல்வி மனோதத்துவ பயிற்சி நெறி ஒன்றை தேசியக் கல்வி நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

தென்பகுதியில் பத்து நிலையங்களில் இப்பயிற்சி நெறி நடைபெறுகின்றது.

இரு வாரங்கள் நடத்தப்படும் இப் பயிற்சி நெறியில் 25 முதல் 50 வரையான ஆசிரியர்கள் ஒரு தடவையில் கலந்து கொள்கின்றனர்.

வகுப்பறைகளில் மாணவர் நடத்தையைக் கண்டறிந்து அதற்கேற்ப பாட நெறிகளைத் தயாரிப்பதே இப்புதிய பயிற்சி நெறியை ஆரம்பித்ததன் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது (இ-எ)

## லண்டன் ஆஸ்பத்திரியில் சிவாஜி

லண்டன், மே 18

பிரபல தமிழ்த் திரைப்பட நடிகரும், ஜனதா கட்சியின் தமிழகத் தலைவருமான சிவாஜிகணேசன் இருதய பரிசோதனைக்காக லண்டனில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## தேசத்துரோகி சுடப்பட்டார்

அம்பிலாந்துறை — அம்பலப்படி இராணுவ முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் வைத்து தேசத்துரோகி ஒருவர் விடுதலைப் புலிகளால் கடந்த செவ்வாயன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

கல்முனையைச் சேர்ந்த பிரதாப் என்பவரே கொல்லப்பட்டவராவார். (இ-3)

# உணவு நிலையங்களின் சீர்கேடு நோய் பரவலுக்கு ஒரு காரணம்

யாழ். சுகாதார வைத்திய அதிகாரியின் செய்திக் குறிப்பின் சில பகுதிகள்.

நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கமாரி போன்ற குடல் சார்ந்த நோய்கள் தற்போது யாழ். மாநகராட்சி மன்றப்பிரதேசங்களில் குறிப்பாக, நாவாந்துறை, குருநகர் போன்ற பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் பரவி வருகின்றன. நெருப்புக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட பலர் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே, இவை பற்றிச் சகலரும் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டு தகுந்த சுகாதாரப்பழக்க வழக்கங்களை கடைப்பிடித்து நோயிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி 11 ஆம் திகதி வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நோய்கள் பரவுவதற்கு பல காரணிகள் அவதானிக்கப்பட்டு அவற்றினைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - உணவு விற்பனை நிலையங்களின் சீர்கேடுகள் நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுவதற்கு முக்கிய காரணமாக கருதப்பட்டு இந்த நிலையைத் தவிர்த்து மக்களது சுகநலத்தைப் பாதுகாக்க உணவு விற்பனை செய்வோர் தங்களது பூரணமான ஒத்துழைப்பினை நல்க வேண்டுமென அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு விற்பவர்கள் உணவுப் பொருள்களை ஈ முதலிய நோய்க்காவிகள் அணுகா வண்ணம் மூடிவைக்க வேண்டும்;

நீர் சேகரிக்கும் கொள்கலன்கள் சுத்தமானதாகவும் மூடப்பட்டதாகவும் இருக்க வேண்டும்; பாவனைப் பொருள்கள் யாவும் சுத்தமானதாகஇருக்க வேண்டும்; உணவுச்சாலையும் அதன் சூழலும் சுத்தமாக இருக்கவேண்டும்; உணவுச்சாலை ஊழியர்களது சொந்தச் சுகாதாரம் (உடல் சுத்தம், உடைகளின் சுத்தம் பராமரிக்கப்படல் வேண்டும்; பழுதடைந்த உணவுகளையும்-கலப்பட உணவுகளையும்-சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் உணவுகளையும் விற்கலாகாது.

முக்கியமாக திறந்து வைத்து விற்கப்படும் உணவுகள் எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி திடீர் பரிசோதனை குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படவுள்ளது. சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் உணவு விற்பனையாளருக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. திறந்து வைத்து விற்கப்படும் உணவுகளை வாங்கி உண்ண வேண்டாம் என பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (க-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் மாற்றம் இல்லை என்கிறார் டி. பி.

கொழும்பு, மே 17

அமைச்சரவையை விரைவில் மாற்றி அமைக்கும் உத்தேசம் எதுவும் தமக்குக் கிடையாது என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் ஜனாதிபதி விஜேதுங்கா தமது அமைச்சரவையை மாற்றி அமைக்க இருப்பதாக முன்னர் ஊகம் தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஓ-எ)

# மரண அறிவித்தல்கள்

## குலசிங்கம் சிவகுமார்

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த குலசிங்கம் சிவகுமார் (மாணவன், யாழ். பல்கலைக்கழகம்) 14 - 05 - 1993 அன்று காலமாகிவிட்டார்.

இவர் தாமோதரம்பிள்ளை குலசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புப் புதல்வனும், ரகுநாதன் (சுவிஸ்), செல்வதி, சாந்தகுமார் (சுவிஸ்), இந்திரகுமார் (சுவிஸ்), கலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிதம்பரப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), இலட்ஷிமிப்பிள்ளை ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (18 - 05 - 1993) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
தா. குலசிங்கம் (தகப்பன்)

குருக்கள் பகுதி,
கரணவாய். (25715)

## சுந்தையா இராமநாதன்

(முன்னாள் வைத்தீஸ்வரக்கல்லூரி ஆசிரியரும், சென். ஜோன்ஸ் அக்கடமி அதிபரும்)

வண்ணார்பண்ணை நாவலர் வீதியைச் சேர்ந்த சுந்தையா இராமநாதன் 17-05-1993இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சண்முகநாதன், காலஞ்சென்ற கணநாதன், காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி பரமசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பொ. பரமசிவம் அவர்களின் மைத்துனரும், உலகேஸ்வரி மெய்நெறிகண்ட தேவன் (U. K.), சிவபாலன், சிவகுமார் (U. K.), சிவசக்தி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 17-05-1993 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சிவபாலன் (மருமகன்).
சிவசக்தி (மருமகள்).

184, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (6189)

## திருமதி தம்பிராசா கண்ணம்மா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 9, முதலியார் ஒழுங்கை நல்லூர் தெற்கு யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான தம்பிராசா கண்ணம்மா 17-05-1993 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற விசுவலிங்கம் தம்பிராசாவின் அருமை மனைவியும், சசிகலாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தம்பிஐயா (வர்த்தகர் யாழ்ப்பாணம்), தங்கலெட்சுமி ஆகியோரின் சகோதரரும், சி. துரைராஜா, காலஞ்சென்ற செல்வராஜா, சி. பஞ்சலிங்கம் (ஜேர்மனி), சி. தருமராசா (ஜேர்மனி), சி. ஆனந்தராசா (கனடா), திருமதி க. பரமேஸ்வரி, திருமதி சி. இராசேஸ்வரி, திருமதி தே. கோணேஸ்வரி (ஜேர்மனி), திருமதி ப. சத்தியபாமா (கொழும்பு), கா. வரதராசா (கொழும்பு), கா. லிங்கநாதன் (ஜேர்மனி), கா. தளையசிங்கம் (சுவிஸ்), திருமதி க. கிருஷ்ணமணி (மணி), ச. விநாயகமூர்த்தி, திருமதி த. லோகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, தங்கக்குட்டி தம்பதிகள், காலஞ்சென்ற கார்த்திகேசு, மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-5-1993) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல் :
க. தம்பிஐயா
(சகோதரர்)

இல. 9, முதலியார் ஒழுங்கை,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். (25718)

## கண்ணம்மா

காலஞ்சென்ற இரத்தினகோபாலின் அன்பு மனைவி கண்ணம்மா 17-5-93 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற தனபூபதி அம்மா (ஆசிரியை)வின் அன்புத் தாயாரும், சபாரட்ணத்தின் அன்பு மாமியும், முரளிதரன் (ஜேர்மனி), கிரிதரன் (யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பயிலுநர்), வித்தியாதரன், ஜனாதரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (18-5-93) பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
ச. கிரிதரன்

34, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி றோட்,
யாழ்ப்பாணம். (25719)

# போர் தொடரின் மக்களின் மனோநிலை பாதிக்கப்படும்

## நோர்வே நிபுணர் தகவல்

யாழ்ப்பாணம், மே 18

வடக்கு - கிழக்கில் நடைபெறும் போரினால் இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளனர். போர் தொடரும் பட்சத்தில் மனோநிலை பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் ஆபத்து உண்டு.

இவ்வாறு தகவல் வெளியிட்டார் நோர்வே நாட்டைச் சேர்ந்த மனோவியல் நிபுணர் டாக்டர் ஹரால்ட் ரெப்பிஸ்கார்ட்.

பேருட் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மனநோய் பாதிப்புக் குறித்து ஆராய்ந்து விவரம் அறிவதற்காக அவர் இங்கு வந்துள்ளார்.

நோர்வே தொறன்கயிற் நகரில் அமைந்துள்ள மனநோய் வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியான டாக்டர் ஹரால்ட் கடந்த ஒரு வாரகாலமாக பருத்தித்துறைப் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக ஆய்வு ஒன்றை நடத்தினார். இப்போது யாழ்ப்பாணப் பகுதியில் மக்களின் மனோவியல் தாக்கம் குறித்து ஆராய்ந்து வருகிறார்.

டாக்டர் ஹரால்ட் குடாநாட்டு மக்களின் மனோநிலை பாதிப்புக் குறித்துப் பின்வரும் தகவல்களைத் தெரிவித்தார்.

★ வடக்கில் தொடரும் போரினால் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், நடுத்தர வயதினர், வயோதிபர் என்று பலதரப்பட்ட மக்களும் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

★ அகதிமுகாம்களில் போதிய வசதிகள் இல்லாததாலும், இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள உளரீதியான தாக்கத்தாலும், குடும்பத்துக்கு பொறுப்பானவர்களை இழந்ததாலும், விமான, ஷெல்தாக்குதல்கள் தொடர்வதாலும் மக்களின் மனோநிலை பாதிக்கப்பட்டு தாக்கம் ஏற்பட்டுள்ளது.

★ மனோநிலை பாதிப்புக்கு மருந்து மூலம் தீர்வுகாண முடியாது. நவீனமுறையில் ஆலோசனை வழங்குவதன் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். (அ 3)

## அடுத்த வாரம் பதவியேற்பர்?

கொழும்பு, மே 18

நேற்று நடந்த மாகாண சபைத் தேர்தலில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் அடுத்த வாரமளவில் அந்தந்த மாகாண ஆளுநரின் முன்னால் பதவிப் பிரமாணஞ் செய்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது. [த-எ]

## வாக்குப்பெட்டி எடுத்துச் செல்வது பற்றிய அறிவிப்பு

கொழும்பு, மே 18

மாகாணசபைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளைக் கொண்ட பெட்டிகளை, வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு பொலீஸ் வாகனங்களில் எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

அந்தந்த வாக்களிப்பு நிலைய தலைமைத் தேர்தல் அதிகாரி தமது வாகனங்களிலேயே வாக்குப் பெட்டிகளை வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்வார்கள் என்று தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்திருந்தார். (த-எ)

## பீரங்கித்தாக்கு

தென்மராட்சி, மே 18

நேற்று அதிகாலையில் அல்லிப்பளை, கிளாலிப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றது. (உ-117)

## நேற்று ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சபைத் தேர்தலில் 53 வீதமானோர் வாக்களித்திருந்தனர். ஆனால் இம்முறை இதற்குக் கூடுதலாக சுமார் 70 வீதமானோர் வரை வாக்களித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

17 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டிருந்த பல வாக்களிப்பு நிலையங்களுக்கு தேர்தலைக் கண்காணிக்க இலங்கை வந்துள்ள 25 சர்வதேச அவதானிகள் நேற்றுச் சென்றனர்.

இந்த அவதானிகள் இன்று கொழும்பு திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் 26 வாக்களிப்பு நிலையங்களுக்கு விஜயம் செய்த — இந்தியாவைச் சேர்ந்த அவதானி திரு. எரிக் கொன்ஸ்லேவ்ஸ் — வாக்களிப்பு அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதாக தெரிவித்தார்.

இத்தேர்தலில் எதிரணிக்கே அதிக வெற்றிவாய்ப்பு இருப்ப[illegible] பித்த சமயம், ஏ. எவ். பீ [illegible]

# புதிய தமிழக அமைச்சர்கள் நேற்று பதவியேற்றனர்

## 'ஜெ'யின் காலிலும் வீழ்ந்தனர்

தமிழக மாநில அமைச்சரவையில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட 12 அமைச்சர்கள் நேற்று மாலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பதவி ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் ஜெயலலிதா, சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

புதிய அமைச்சர்களில் இராம. வீரப்பன், துரை ராமசாமி ஆகிய இருவர் தவிர எஞ்சிய 10 பேரும் பதவி ஏற்கும் முன்னும் பதவி ஏற்ற பின்னும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் காலைத் தொட்டு வணங்கினார்கள்.

ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை.

முதலமைச்சர் உட்பட 18 பேர் அடங்கியதாக இருந்த அமைச்சரவை தற்போது 27 அமைச்சர்களைக் கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. (உ-எ)

## ஊழல் மலிந்துவிட்டது!

# ஜெயலலிதாவின் அரசு பதவி விலக வலியுறுத்து

தமிழக அரசில் ஊழல்கள் மலிந்துவிட்டதாகவும்—

இதற்குப் பொறுப்பேற்று முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலகவேண்டும் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மாநில அமைச்சரவையை முதலமைச்சர் விரிவு படுத்தியிருப்பது விரயம் என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மக்களின் நம்பிக்கையை பெற ஜெயலலிதா நடத்தும் மற்றொரு நாடகம் இது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (உ-எ)

## புத்தாண்டு விடுமுறைக்கு வந்த

# திருமலை அரசஊழியரில் 40 பேரே இன்று பயணம்

திருமலையில் இருந்து புத்தாண்டு விடுமுறையில் யாழ். வந்து போக்குவரத்து வசதியின்மை காரணமாக இங்கு தங்கியுள்ள அரச உத்தியோகத்தர்களில் சுமார் 40 பேர் மட்டும் இன்று மாலை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து 'குமண' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கூட்டிச் செல்லப்பட்டுப் பின்னர் அங்கிருந்து 'நரோமா' கப்பல் மூலமாக அவர்கள் திருமலை செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கப்பலில் செல்ல வசதி செய்துதருமாறு கோரி மேற்படி அரச உத்தியோகத்தர்கள் சுமார் 200 பேர் நேற்று யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபரின் அலுவலகத்தை முற்றுகையிட்டிருந்தனர். கடந்த வாரத்திலும் அவர்கள் இவ்வாறே முற்றுகையிடிருந்தனர். (அ-5-100)

# மரண அறிவித்தல்

## ரெய்மென்ட் கென்னத் யோசேப்

(தாதிய உத்தியோகத்தர்-யாழ். போதனா வைத்தியசாலை)

தும்பளையைச் சேர்ந்த ரெய்மென்ட் கென்னத் யோசேப் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையின்போது காலமாகிவிட்டார்.

இவர் மேரி இமாக்குலேற்றாவின் அன்புக் கணவரும், அல்வின், போல்வின், கிளடிஸ், எட்வின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு தும்பளையில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நாளை மாலை 4 மணிக்கு எடுத்து வரப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல் :
மேரி இமாக்குலேற்றா
(மனைவி)

லூர்த்துமாதா கோவிலடி,
தும்பளை, பருத்தித்துறை. (25720)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org